NUS National University of Singapore

**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 25 June 2018

# மூன்று பல்கலைக்கழகங்களின் மாணவ தொண்டூழியர்களை இணைத்த சமூக சேவை



தேசிய பல்கலைக்கழகத்தின் இந்திய கலாசார மன்றம், தமிழ்ப் பேரவை, நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கிய மன்றம், சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகத்தின் 'தமிழா' கழகம் ஆகிய மாணவர் அமைப்புகள் ஒன்றிணைந்து செயல்பட்டன. **படம்: புரோஜெக்ட் ஸ்டிரைஃப்**

**செய்தி: ரூபனேஸ்வரன் ஞானசுப்ரமணியம்**

வெவ்வேறு பல்கலைக்கழகங்களில் இருந்தாலும் சமூக நலனுக்காக ஒன்றிணைந்தனர் இங்குள்ள மூன்று பல்கலைக்கழகங்களின் தமிழ் மாணவர்கள்.

சமூக நலன் மீது உள்ள நாட்டத்தினாலும் ஒரு மாற்றத்தை உண்டாக்க வேண்டும் என்ற வேட்கையினாலும் 'புரோஜெக்ட் ஸ்டிரைஃப்'' எனப்படும் சமூக ஈடுபாட்டு முயற்சியின் வாயிலாக அந்த மாணவர்கள் இணைந்து உள்ளனர்.

தேசிய பல்கலைக்கழகத்தின் இந்திய கலாசார மன்றம், தமிழ்ப் பேரவை, நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் தமிழ் இலக்கிய மன்றம், சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழகத்தின் 'தமிழா' கழகம் ஆகியவை இந்தக் கூட்டு முயற்சியில் ஈடுபட்டிருக்கின்ற பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள்.

"பல்கலைக்கழக கல்வியில் நாங்கள் கற்றுக்கொண்ட திறன்களைச் சமூக நலனுக்காக இந்தத் திட்டத்தின்வழி பயன்படுத்த முற்பட்டோம்,'' என்றார் சிங்கப்பூர் நிர்வாகப் பல்கலைக்கழக தமிழாவின் சமூக சேவை ஒருங்கிணைப்பாளரான முஹம்மது ஆஷிக், 22.

"ஒரு குழுவாக நாங்கள் குறைந்த வருவாய்க் குடும்பங்களுக்கு உதவி செய்யும் ஒரு திட்டத்தை வகுத்த பிறகு, அதனை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு எங்களுக்கு சமூக மன்றங்கள் மற்றும் மற்ற அமைப்புகளின் ஆதரவும் ஆலோசனையும் தேவைப்பட்டன,'' என்று சொன்னார் நன்யாங் தொழில்நுட்ப பல்கலைக்கழக தமிழ் இலக்கிய மன்றத்தின் துணைத்தலைவி, சுகந்தி பெரியசாமி, 22.

இதன் அடிப்படையில், செங்ஹுவா சமூக மன்றத்தோடும் மக்கள் கழக இளையர் இயக்கத்தோடும் இணைந்து செஞ்சா வட்டாரத்தில் வசிக்கும் 80 குறைந்த வருவாய்க் குடும்பங்களுக்கு உதவும் வாய்ப்பு 'புரோஜெக்ட் ஸ்டிரைஃப்' மாணவ தொண்டூழியர்களுக்குக் கிட்டியது.

'புரோஜெக்ட் ஸ்டிரைஃப்'யின் முதல் கட்ட வேலையாக தேர்ந்தெடுக்கப்பட்ட 80 குடும்பங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிப் பொருட்கள் அடையாளம் காணப்பட்டன.

அதன் பிறகு செங்ஹுவா சமூக மன்றத்தில் வார இறுதி நாட்களன்று பொருட்களைத் திரட்டிய பிறகு ஜூன் இரண்டாம், மூன்றாம் தேதி அவற்றை மாணவ தொண்டூழியர்கள் அந்தந்த குடும்பங்களுக்கு வழங்கினர்.

அதனுடன் சில குடும்பங்களுக்கு எம்மாதிரியான ஆதரவும் வசதிகளும் மேலும் தேவைப்படுகின்றன என்பதையும் மாணவர்கள் எதிர்கால திட்ட நோக்கத்தோடு பதிவு செய்தனர்.

முதன்முறையாக நடத்தப்பட்ட இந்தச் சமூக சேவை முயற்சி செஞ்சா வட்டார குடியிருப்பாளர்களிடையே ஒரு நல்ல வரவேற்பைப் பெற்றது.

"இது ஒரு சிறந்த சேவை என்று நான் நினைக்கிறேன். எங்களைப் போன்ற வயதானவர்களுக்கு உடம்பு சரியில்லாமல் போவதால், இதுபோன்ற சேவைகள் எங்களது அன்றாட வாழ்க்கைக்கு ஆதரவாக இருக்கின்றன.

இஸ்திரிப் பெட்டி, குக்கர் போன்ற அடிப்படை வசதி பொருட்களை நன்கொடையாகக் கொடுப்பது புதுமையான ஒரு முயற்சியாகவும் உள்ளது,'' என்று குறிப்பிட்டிருந்தார் பலன் பெற்ற குடியிருப்பாளரான முகமது ஜமாலுதீன்.

80க்கும் மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் இணைந்து செயல்பட்ட இந்த நன்கொடை முயற்சிக்கு அப்பால் தொடக்க நிலை, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கான "ரொபோடிக்ஸ்'' பயிலரங்கும் 'இணைய வழி கொடுமை' தொடர்பான விழிப்புணர்வை பரப்பும் சிறப்புப் பயிலரங்கும் நடத்தப்பட்டன.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.